தினமணி

## <u>மானாவாரியிலும் புரட்சி காணும் கேழ்வரகு சாகுபடி !</u>



குறைந்த தண்ணீர், நிறைந்த மகசூல், அதிக லாபம், மானாவாரியிலும் புரட்சி காணும் சத்துமிகு சிறுதானியமாக கேழ்வரகு சாகுபடி விளங்குவதாக காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியது: வடகிழக்கு, தென்மேற்குப் பருவமழையை ஒட்டி விதைப்பு செய்யலாம்.சராசரியாக 400 முதல் 500 மி.மீ. மழையளவு உள்ள இடங்களில் பயிர் செய்வது மிகவும் ஏற்றதாகும். ரகங்கள்: இறவை மார்கழி பட்டம் (ரகங்கள்- கோ -12, கோ -14, கோ -15), இறவை சித்திரைப் பட்டம் (ரகங்கள்- கோ -12, கோ -14, கோ -15), மானாவாரி - ஆடிப் பட்டம், புரட்டாசிப் பட்டம் (ரகங்கள் - கோ -11, கோ -12, கோ-14,பையூர்-1,2,ஆடு365).

**நிலம் தயாரித்தல்:** கோடை மழையைப் பயன்படுத்தி பயிர் அறுவடைக்குப் பின்பு நிலத்தை சட்டிக் கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். பின்னர் ஒவ்வொரு மழைக்குப் பின்பும் கலப்பைக் கொண்டு நிலத்தை உழுதுவிட வேண்டும். கோடை உழவினால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு மழைநீர் சேமிக்கப் படுவதுடன் கோடை மழையில் முளைக்கும் களைகள் கட்டுப்படுத்தப் படுகின்றன. நிலத்தடியில் இருக்கும் கூட்டுப் புழுக்கள் உழவின்போது மேலே கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுவதால் பயிர் காலத்தில் பூச்சித் தாக்குதல் குறையும். நீர் வரத்தைப் பொறுத்து 10 அல்லது 20 சதுர மீட்டரில் பாத்தியை அமைக்க